# தமிழ் வகுப்பேடு

வகுப்பு : பத்து　　　　　　இயல் - 1

## அன்னை மொழியே (செய்யுள்)

பின்வரும் செய்யுள்வரிகளைப் படித்து அதன் கீழ்கண்ட வினாக்களுக்கு உரிய முறையில் விடையளி :

> அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !
> முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே !

வினாக்கள் :

1. இப்பாடலாசிரியரின் இயற்பெயர் யாது ?
   இப்பாடலாசிரியரின் இயற்பெயர் துரை. மாணிக்கம் என்பதாகும்.
2. இப்பாடலாசிரியரின் காலம் யாது?

   இப்பாடலாசிரியரின் காலம் 10.3.1933 முதல் 11.6.1995 வரைஆகும்.
3. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
   இப்பாடல் இடம் பெற்ற நூல் 'கனிச்சாறு' ஆகும்.
4. இப்பாடலாசிரியரின் பிற படைப்புகள் யாவை?
   - ஐயை
   - கொய்யாக்கனி
   - உலகியல் நூறு
   - பாவியக்கொத்து
   - நூறாசிரியம்
   - எண்சுவை எண்பது
   - மகபுகுவஞ்சி
   - பள்ளிப்பறவைகள்
   - திருக்குறள் மெய்ப்பொருளுரை
5. நறுங்கனி - இலக்கண குறிப்பு தருக.
   நறுங்கனி - பண்புத்தொகை
6. செந்தமிழ் , தும்பி - பொருள் தருக.
   செந்தமிழ் - வளமான தமிழ்
   தும்பி - வண்டு

7. “செப்பரிய நின் பெருமை” எத்தலைப்பில் இடம் பெற்றுள்ளது?

செப்பரிய நின் பெருமை “ முந்துற்றோம்” என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

8. பாவலரேறு - விளக்குக.

ஆசுகவி , மதுரகவி , சித்திரக்கவி , வித்தாரக்கவி ஆகிய நான்கு விதமான கவிதைகளை எழுதுவதில் வல்லவரே பாவலரேறு ஆவார்.

விடையளி :

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?

தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :

- அழகார்ந்த செந்தமிழே !
- தாய்மொழியாம் தமிழ் மொழியே!
- அழகாய் அமைந்த செழுந்தமிழே!
- பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலக பேரரசே!
- பாண்டிய மன்னனின் மகளே!
- திருக்குறளின் பெருமைக்குரியவளே!
- பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே!
- பதினெண் கீழ்க்கணக்கே!
- நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைப் பணிந்து வாழ்த்துகிறோம் என்பதை ,

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே !
மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

என்கிறார் ஆசிரியர்.

செப்பரிய நின் பெருமை :

- செழுமை தமிழே ! எனது உயிரே ! சொல்லுதற்கரிய உனது பெருமைகளை எவ்வாறு என்னுடைய தமிழ் நாக்கு எடுத்துரைக்கும்.
- தொன்மையும் , தனிச்சிறப்பும் , இலக்கியவளமும் , வியக்க தகுந்த உனது நீண்ட நிலைத்த தன்மையும் , வேற்று மொழியினரின் புகழுரைகளும் எமக்குள் பற்றினை ஏற்படுத்துகின்றன.
- செந்தாமரை மலரிலுள்ள தேனை பருகி சிறகசைத்துப் பாடும் வண்டை போல நாங்களும் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் ஒளி பெற்று உன் பெருமையை முழங்குகின்றோம் என்பதை,

“ உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல் மூளச்

செந்தாமரை தேனைக் குடித்துச் சிறகார்ந்த....”

என்ற பாடல் வரிகளின் மூலம் பாவலரேறு தமிழ் அன்னையைப் பாராட்டுகின்றார்.